RBI/2004/19
DCM(NE)/No.310/08.07.18/2003-04

ஜனவரி 19, 2004

**தலைவர், பாரத ஸ்டேட் வங்கி மற்றும்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள்**
**பணப்பெட்டக அறை (Currency Chest) கொண்ட**
**அனைத்து வங்கிக் கிளைகள்**

அன்புடையீர்,

ரூபாய் நோட்டுகள், நாணயங்கள் மாற்றுவதற்கான
வசதிகளைப் பொதுமக்களுக்குச்செய்து கொடுத்தல்

இந்திய ரிசர்வ் வங்கி சிறுசிறு சேவைகளான ரூபாய்நோட்டுகள்/ நாணயங்கள் வழங்குதல், மாற்றிக்கொள்தல் போன்றவைகளைப் பொதுமக்களுக்கு அளித்து வருவது நீங்கள் அறிந்ததே. எங்களுடைய வட்டாரா அலுவலகங்கள் புதிய / நல்ல நோட்டுகளை வழங்குதல், அழுக்கு நோட்டுகளை மாற்றிக் கொள்தல், வங்கிநடவடிக்கைக்காகவோ அல்லது மாற்றலுக்காகவோ நோட்டுகளையும் நாணயங்களையும் ஏற்றுக்கொள்கிறது. இச்சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கோடு பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள்,சில அயல்நாட்டு வங்கிகள் ஆகியவற்றிற்கு நிறைய அளவுக்குப் பணப்பெட்டக அறைகளை வைத்துக் கொள்ள அனுமதியும் அளித்துள்ளது. பொதுத்துறை வங்கிகளுக்கும், பணப்பெட்டக அறைகளுடைய மற்ற வங்கிகளுக்கும், இந்திய ரிசர்வ் வங்கி (நோட்டு திரும்பப்பெறுதல்) விதிகளின் படி, முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

2. சமீப காலத்தில், பணப்பெட்டக அறைகள் கொண்ட வங்கிக்கிளைகளுக்கும், அவை வழியாக மற்ற கிளைகளுக்கும் போதுமான புது நோட்டுகளும் நாணயங்களும் கிடைக்கப் பல வழிகளை மேற்கொண்டோம். மேலும், பணப்பெட்டக அறைகளுடைய வங்கிக் கிளைகளில் சேர்ந்திருந்த அழுக்கு நோட்டுகளை அடியோடு அகற்றியது மட்டுமல்லாமல், தொடர்ச்சியான முறையில் அத்தகைய அழுக்கு நோட்டுகள சேரச்சேர அவ்வப்பொழுது அனுப்ப வசதியாகவும் அவைகள் உடனுக்கூடன் கூடுதலான பாதுகாப்பு மேற்பார்வையில், அதிநவீன பணப்பரிசோதனை சரிபார்த்தல் இயந்திரங்கள் மூலம் விரைவாகவும் அதிக அளவிலும் அகற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன.

3. வாடிக்கையாளர் சேவையை விரிவுபடுத்தும் நோக்கோடு (அ) எல்லா இலக்க மதிப்புள்ள நோட்டுகளில் புதிய / நல்ல நோட்டுகளுக்கான அவர்களது தேவையைப் பூர்த்தி செய்தல் (ஆ) அழுக்கடைந்த நோட்டுகளை மாற்றிக் கொள்தல் (இ) <u>கிழிந்த/சேதமடைந்த நோட்டுகளுக்கு மாற்று மதிப்பு வழங்குதல்</u> (ஈ) நாணயங்களையும் நோட்டுகளையும் வங்கிச்செயல் பாட்டுக்கோ அல்லது மாற்றிக் கொள்ளவோ பெற்றுக் கொள்ளுதல் போன்ற சேவைகளை, பணப்பெட்டக அறைகள் கொண்ட வங்கிகளின் <u>அனைத்துக் கிளைக்கும்</u>* நாடெங்கிலும் மிகத் தீவிரமாகவும் முனைப்புடனும் செய்து,

பொது மக்களை, இவைகளுக்காக ரிசர்வ் வங்கிச செல்லதேவை இல்லாத வகையில் சேவை புரிந்திட வேண்டும். உங்களது கிளைகளில் இத்தகைய சேவைகள் செய்வதை மிகப்பெரிய அளவில் விளம்பரப்படுத்தி பொடுமக்கள் அறியும் படிச் செய்ய வேண்டும்.

4. கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

அன்புடன்

(P.K.பிஸ்வாஸ்)

* DCM(NE)No.732/08.07.18/2002-03 தேதி ஜுலை 28, 2006 இன் படி,

(1) பணப்பெட்டக அறைகளுடைய வங்கிக் கிளைகள் கிழிந்த/ சேதமடைந்த நோட்டுகளுக்கு மாற்று மதிப்பு வழங்க வேண்டும். கிழிந்த/ சேதமடைந்த நோட்டுகள் இந்திய ரிசர்வ் வங்கி (நோட்டு திரும்பப்பெறுதல்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது) இன்படி மாற்றுமதிப்பு வழங்கப் படுகிறது. விதிகளின் விபரம் வங்கியின் இணைய தளத்தில் பார்க்கலாம்.

(2) பணப்பெட்டக அறைகள் கொண்ட வங்கிகளின் அனைத்துக்கிளைகளும் நாடெங்கிலும் கீழ்கண்ட சேவைகளை முனைப்புடனும் தீவிரமுடனும் செயல்படுத்தி, பொதுமக்களை இவைகளுக்காக ரிசர்வ் வங்கிச் செல்லத் தேவையில்லாத வகையில் சேவை புரிந்திட வேண்டும்.

(அ)எல்லா இலக்க மதிப்புள்ள நோட்டுகளில் புதிய/நல்ல நோட்டுகளுக்கான அவர்களது தேவையைப்பூர்த்தி செய்தல்

(ஆ)அழுக்கடைந்த நோட்டுகளை மாற்றிக் கொள்தல்

(இ) கிழிந்த/சேதமடைந்த நோட்டுகளுக்கு மாற்று மதிப்பு வழங்குதல்

(ஈ) நாணயங்களையும் நோட்டுகளையும் வங்கிச்செயல்பாட்டுக்கோ அல்லது மாற்றிக் கொள்ளவோ பெற்றுக் கொள்ளுதல் போன்ற சேவைகள்.